# ஜெயவர்த்தன யோசனைகளின் முரண்பாடு மீதான விளக்கம் இன்று டில்லிக்கு வந்து சேரலாம்!

## அமிர்தலிங்கம் நேற்று அறிவிப்பு

(புதுடில்லி)

இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக ஜனாதிபதி ஜெயவர்த்தன முன்வைத்துள்ள யோசனைகளிலுள்ள முரண்பாடுகள் பற்றிய விளக்கங்களை இந்திய அரசாங்கத்தின் மூலமாக இன்று பெற்றுக்கொள்ள முடியுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் புதுடில்லியில் நேற்றுத் தெரிவித்தார். புதுடில்லியில் நேற்று இந்திய கொள்கை ஆலோசனைக் குழுத் தலைவர் திரு. ஜீ. பார்த்தசாரதி, அமைச்சர் திரு. பீ. சிதம்பரம், மற்றும் வெளியுறவு அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு கூறினார். இலங்கை அரசின் யோசனைகளிலுள்ள முரண்பாடுகள் பற்றி தாம் இந்திய அதிகாரிகளிடம் இச்சந்திப்பின் போது விளக்கியதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். திருவாளர்கள் அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், இரா. சம்பந்தன் ஆகியோர் நேற்று முன்தினமிரவு புதுடில்லி சென்று அங்கு பேச்சு —4ம் பக்கம் பார்க்க

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 08-7-86 செவ்வாய் ஆனி 24 ஷவ் 29 முழக்கம் 53

# கொழும்பு செல்லும் லொறிகள் பொருட்கள் ஏற்றுவதற்கு தடை

## ராணுவ அறிவிப்பு இன்று வரும்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் லொறிகளில் எந்தவொரு பொருளையும் ஏற்றிச்செல்லக் கூடாதென இன்று முதல் முற்றாகத் தடைவிதிக்கப்படலாமென்று நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியிடப்படலாம்.

கொழும்பில் நடைபெறவிருக்கும் அரசியல் கட்சி மகாநாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறப்படுகின்றது.

யாழ். மாவட்ட ராணுவ உயர் பீடம் இதுதொடர்பான கடுமையான சோதனை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக வெங்காயம், மிளகாய் உட்பட மரக்கறி வகைகள் லொறிகளில் ஏற்றிச் செல்வதால் அவைகளுடன் சேர்ந்து வெடிகுண்டுகளும் கொழும்புக்குச் செல்லலாம் என்று பாதுகாப்புப் பிரிவினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

### பலாலியில் பொலிஸ் பிரிவு

பலாலி ராணுவ முகாமில் பொலிஸ் நிலைய உப பிரிவு ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ். பொலிஸ் நிலைய —4ம் பக்கம் பார்க்க

### மாங்கேணி கண்ணிவெடிக்கு பொலிஸ் கான்ஸ்டபிள் பலி

மட்டக்களப்பிலுள்ள மாங்கேணியில் நேற்று மாலை இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் ஒரு பொலிஸ் கொல்லப்பட்டதாகவும்நான்கு பொலிஸார் படுகாயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் வாகனங்களில் ரோந்து சென்று கொண்டிருந்தபோதே இத்தாக்குதல் இடம்பெற்றதாகவும் தாக்குதலின் பின்னர் இரு தரப்பினரிடையேயும் நேரடி மோதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த பொலிஸார் ஹெலிகொப்டர் மூலமாக கொண்டு செல்லப்பட்டு ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### விடுதலைப் புலிகள் அறிவிப்பு

### மாங்கேணி இராணுவ முகாம் 3 கட்டடங்கள் தகர்ந்தன

மட்டக்களப்பிலுள்ள மாங்கேணி இராணுவ முகாம் மீது சனிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு உரிமை கோரி தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.

நள்ளிரவு 11.45 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல் மூன்று மணி நேரம் நடைபெற்றது. இவ் உக்கிர மோதலின் பின்பு முகாமின் இடது பக்கமாக உட்புகுந்த எம்மவர் மூன்று பாரிய கட்டடங்களை முற்றாகத் தகர்த்தனர். இக் கட்டடங்களுள் இருந்த அனைவரும் இடிபாடுகளுக்குள் —4ம் பக்கம் பார்க்க

### கொழும்பு பஸ், லொறிகள் நாவற்குழி பாதை கட்டாயம்

ஆனையிறவூடாக குடாநாட்டுக்கு அப்பால் செல்லும் வாகனங்களுக்கு பாஸ் எடுக்க பலாலி முகாமுக்கு செல்பவர்களுக்கு புதிய விதி முறையும் வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்வதானல் கண்டி வீதியூடாக நாவற்குழி முகாம் முன்பாகவே செல்லவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. அவ்வாறு செல்லாத வாகனங்கள் ஆனையிறவு தடை முகாமை தாண்டமுடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று சில வாகனங்கள் கண்டிவீதியூடாக நாவற்குழி முன்பாகவே சென்றன. அங்கு வைத்து ...கையொப் ...4ஆம் பக்கம் பார்க்க

### கோட்டையில் இன்று சந்திப்பு

யாழ். தொலைத் தொடர்புகள் திணைக்கள அதிகாரிகளும் ஊழியர்களின் பிரதிநிதிகளும் வட பிராந்திய இராணுவ இணைப்பதிகாரியின் அழைப்பின் பேரில் இன்று காலை கோட்டை இராணுவ முகாமில் அவரைச் சந்திக்கவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இன்று காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ள இச் சந்திப்பில் கோட்டைக்கு அருகேயுள்ள மேற்படி திணைக்கள அலுவலகத்தில் வேலை செய்யுமாறு ஊழியர்களை இணைப்பதிகாரி வலியுறுத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### கிளிநொச்சி தாக்குதல்

கிளிநொச்சி பொலிஸ்–இராணுவ கூட்டு முகாமிலிருந்து நேற்று மாலை மூன்று மணி முதல் மீண்டும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. இவை திருநகர், கரடிப்போக்குப் பகுதிகளில் வந்து விழுந்த போதிலும் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

### கூட்டணி ஜனாதிபதி சந்திப்பு 15க்கு முன் நடைபெறும்

அரசியல் கட்சிகள் மாநாடு நடைபெறும் 15-ம் திகதிக்குமுன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கொழும்பு வரலாமென தெரியவந்துள்ளது. இவர்கள் அரசியல் கட்சிகள் கூட்டத்தில் பங்குபற்ற மாட்டார்கள். அதற்கு முன்னர் அரசின் யோசனைகள் பற்றி ஜனாதிபதியுடன் பேசக்கூடுமென்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் சந்தித்து

### டிக்ஸிற்றிடம் ஜனாதிபதி விளக்கங்களை கையளித்தார்

இலங்கையிலுள்ள பாரதத் தூதுவர் ஜே. என். டிக்ஸிற் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்து சுமார் அரைமணி நேரம் உரையாடினார்.

புதுடில்லி கேட்டிருந்த சில மேலதிக விளக்க விபரங்கள் இச் சந்திப்பின்போது ஜனாதிபதியால் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. இவை இன்று புதுடில்லிக்கனுப்பப்படும்.

முதலமைச்சரின் நிறைவேற்று அதிகாரங்கள் இதில் முக்கியமாக இடம்பெறுகின்றது.

### 'மினி' முகாமிலிருந்து சூடு! குருநகர் மீனவர் படுகாயம்

மண்டைதீவு மினி இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினல் குருநகரைச் சேர்ந்த ந. மரியதாஸ் (32) என்னும் கடற்றொழிலாளி படுகாயமடைந்து யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 8.30 மணி போல் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்பட்டதாவது:

மரியதாசும் மற்றும் இரு கடற்றொழிலாளர்களும் சென்ற சிறிய மீன்பிடிப்படகு நீரோட்டத்தினல் சிறுத்தீவிற்கும்–மண்டைதீவுக்கும் இடைப்பட்ட பகுதியை நோக்கி திசை மாறிச் சென்றது. அச்சமயம் அப்பகுதியால் வந்த ஹெலிகொப்டர் ஒன்று இப்படகினை அவதானித்துவிட்டு சென்றது.

இதன் பின்னர் இப்படகின் மீது மண்டைதீவு முகாமிலிருந்து பல தடவைகள் சுடப்பட்டன. ...4ம் பக்கம் பார்க்க

### மன்னாரில் ஏழு கடைகள் எரிப்பு

### 5 தமிழருடையவை; 2 முஸ்லிம்களுடையவை

(மன்னார்)

மன்னார் பஜாரில் நேற்று முன்தினம் ஏழு கடைகள் தீ மூட்டி எரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இக் கடைகளில் இருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

எரிந்த கடைகளில் ஐந்து தமிழர்களுடையவை. மிகுதி இரண்டும் முஸ்லிம்களுக்குச் சொந்தமானவையாகும்.

இக் கடைகள் எரிக்கப்பட்டதால் சுமார் பத்து லட்சம் ரூபாவுக்கும் அதிகமாக நஷ்டம் ஏற்பட்டிருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் கமாண்டோக்களே கடைகளை எரித்ததாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கொள்ளை பற்றி ஆராய கூட்டம்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு லொறியில் கொண்டுவரப்படும் பொருட்கள் கொள்ளையடிக்கப்படுவது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக யாழ். வர்த்தகர் சங்கத்தின் செயற்குழு எதிர்வரும் 19-ம் திகதி சனிக்கிழமை கூடவுள்ளது.

### தொண்டமான் நம்பிக்கை

(சென்னை)

இலங்கையின் கிழக்குப்பகுதி எல்லைகளை மாற்றாமலேயே தனிமாநிலமொன்று தமிழர்களுக்கு ஏற்படுத்த முடியும் என்று அமைச்சர் எஸ். தொண்டமான் தமிழகத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பான யோச —4ஆம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

**வாடகை**

அறை வாடகைக்குண்டு. 109, கன்னுதிட்டி வீதி. (காளி கோயிலுக்கு முன்னல்) யாழ்ப்பாணம். R/24012

## முதுமாணி பட்டம்

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் திருநாவுக்கரசு கமலநாதன் யாழ். பல்கலைக்கழக முதுமணித்தேர்வுப் பெறுபேற்றில் சித்தியெய்தியுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. தி. கமலநாதன் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றுவதுடன் யாழ். கல்வித்திணைக்கள சமூகக்கல்வி ஆசிரியராகவும் பணிபுரிகின்ருர்.

## சிறப்பான கண்காட்சி

நல்லூர் இந்து தமிழ்ப்பெண் பாடசாலை கல்விப் பொருட்காட்சி சென்றவாரம் இடம் பெற்றது. ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஆறுவரை பாட அலகு ரீதியாகவும், ஆண்டு ஏழு தொடக்கம் ஆண்டு பதினென்று வரை பாடரீதியாகவும் இரு பிரிவுகளாக இக் காட்சி ஒழுங்கு பண்ணப்பட்டிருந்தது.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி இப் பொருட்காட்சியை திறந்துவைத்தார். கல்வி அதிகாரிகளான திரு. கந்தசாமி, திரு. சி. சுப்பிரமணியம், திரு. மகேசன், திரு. தேவதவபாலன் ஆகியோர் உட்பட பலர் இக் காட்சியினைப் பார்வையிட்டனர். கல்லூரி அதிபர் திருமதி இ. ஜெகானந்தகுரு இக் காட்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## ஆசிரியர் சம்பளம் வழங்கல்

# சுன்னுகம் ப. நோ. கூட்டுறவு சங்கம் நோக்கும் சிரமம்

(சுன்னுகம்)

வங்கியில் கல்வித் திணைக்களத்தின் கணக்கில் பணமில்லாத காரணத்தால் திருப்பி அனுப்பப்பட்ட காசோலைகள் காரணமாகச் சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது வழமையான செயற்பாடுகளைக் கைவிடவேண்டிய கஷ்ட நிலைக்குள்ளாகியுள்ளது.

இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இங்குள்ள ஆசிரியர்களின் சம்பளப்பணத்தை மாதாமாதம் வழங்கி வருகிறது. இந்த வகையில் கடந்த மாதச் சம்பளக் காசோலைகளைப் பெற்றுக்கொண்டு பணம் வழங்கியபின் வைப்பிலிட்ட காசோலைகள் பணமில்லா நிலை காரணமாக வங்கியினுல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. சங்கம் அத்தியாவசியப் பொருட்களையாவது கொள்வனவு செய்வதில் பணமுடை ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

காசோலைகளுக்காகப் பணத்தைப் பெற்றுக்கொண்ட அதிபர்களிடம் பணத்தை மீளச் செலுத்தி காசோலைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கோர விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதிபர்கள் தாம் பணம் வழங்கிய உதவியாசிரியர்களிடமே பணத்தை மீளப்பெற்றுச் சங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என்ற நிலையுள்ளது.

## போட்டி முடிவுகள்

திருநெல்வேலி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆலயமும், ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமமும் ஒருங்கிணைந்து அண்மையில் ஐபம் எழுதும் போட்டி ஒன்றை நடாத்தின. இப் போட்டியில் பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வி சு. புவனேஸ்வரி முதலாமிடத்தையும், திருநெல்வேலியைச் சேர்ந்த செல்வி ச. உமாதேவி இரண்டாமிடத்தையும், வட இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி செ. சாந்தகுமாரி மூன்ருமிடத்தையும் பெற்றனர்.

பின்வருவோர் இப்போட்டியில் ஆறுதல் பரிசினைப் பெறுகின்ருர்கள். திருமதி ரி. சரவணபவானந்தம் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, செல்வி இ. கலாமதி - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ந. உமாதேவி - அல்வாய், திரு. வே. சூரசங்காரம் - பருத்தித்துறை, செல்வி ப. தில்லைராணி - அல்வாய், செல்வி தெ இந்துமதி - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, செல்வி ப. ஜெயமனேகரி - வட இந்து மகளிர் கல்லூரி.

## போலிகள் ஜாக்கிரதை

(நீர்வேலி)

நீர்வேலி கரந்தன் பகுதியில் உள்ள அகதி முகாமிற்கு நிதியுதவி தேவை எனவும், உடைகள் தேவை எனவும் கூறி பலர் நிதி சேகரிப்பாளர்களாகப் போலி வேஷத்துடன் நடமாடுகின்றனர்.

அண்மையில் உரும்பராய் சந்தியில் உள்ள கடை முதலாளி ஒருவரையும் இவர்கள் ஏமாற்றி ஐநூறு ரூபா பெறுமதியான பல பிடைவைகளை வாங்கினராம்.

இது தொடர்பாக நீர்வேலி பிரஜைகள் குழு பொது மக்களிற்கு விடுக்கும் வேண்டுகோளில்: கோப்பாய் உதவி அரசஅதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட தமது குழுவின் கடிதமற்ற எவரிடமும் நிதி கொடுக்க வேண்டாம் எனவும், அதற்கு தாம் பொறுப்பாளிகள் அல்லர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிறந்தநாள் வாழ்த்து

✽ யாழ். நாவலர் வீதி, முஹம்மது சித்தீக் நாமுல் நுசூஹா தம்பதியின் மகன் அஸ்தக்அஹமது இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்ருர்.

✽ யாழ். காதி அபூபக்கர் வீதி, மாணிக்கம் ஸ்ரீரஞ்சிதமலர் தம்பதியின் மகள் சுகன்யா இன்று தனது ஆருவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர்.

✽ திருமலை பாத்திமா வீதி, நீக்கிலஸ் கிறிஸ்ரீனு தம்பதியின் மகன் நிரேஸ் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர்.

## குடியிருப்பு வசதி

(முல்லைத்தீவு)

இனக் கலவரங்களையடுத்து இடம்பெயர்ந்து தற்பொழுது முள்ளியவளைப் பகுதியில் தங்கியிருப்போருக்கு நிரந்தர வீட்டுவசதியினை ஏற்படுத்திக் கொடுக்க இளைஞர் குழு ஒன்று நடவடிக்கை எடுத்துள்ளது. முள்ளியவளைப் பகுதியில் எவரும் குடியிருக்காத வெற்றுக் காணிகள் இதற்கென பயன்படுத்தப்படவுள்ளது.

## வருடாந்த உற்சவம்

(சரசாலை)

சாவகச்சேரி சந்திரசேகர வாசிவனநாத சிவன்கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

மேற்படி உற்சவம் சரசாலை சிவஸ்ரீ சு. நடராசக்குருக்கள் தலைமையில் செ. பரமானந்தக் குருக்கள் ஆலயக்குரு திரு. தி. நடராசசர்மா ஆகியோர் உதவியுடன் நடைபெற்று வருகின்றது. தேர்த்திருவிழா 12ம் திகதி சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நடைபெறும். தீர்த்தம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறும்.

உ
சிவமயம்

## உபநயன முகூர்த்த விஞ்ஞாபனம்

ஸ்வஜ்தி ஸ்ரீ நிகழும் அக்ஷய வருஷம் ஆனி 25ம் திகதி (09-07-86) புதன்கிழமையும், பூச நட்சத்திரமும், சித்தயோகமும், துதியைத் திதியும் கூடிய சுப தினத்தில் காலை 8.30 முதல் 10.45 வரை வரும் சிங்க லக்கின சுப முகூர்த்தத்தில்,

எங்கள் கனிஷ்ட புத்திரன்

**சிரஞ்சீவி பிரபாகர சர்மாவிற்கு**
**(ராஜா)**

சௌளோ உபநயன பிரம்மோபதேசம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்றிருப்பதால் அத்தருணம் சுற்றம் சூழ சமுகமளித்து ஆசீர்வதிக்குமாறு கேட்டுக் கொள்கிருேம்.

சுபமஸ்த்து

தச்சன்தோப்பு
பிள்ளையார் கோவில்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. R/24016

இங்ஙனம்
சிவஸ்ரீ. ப. சசிதானந்த குருக்களும்,
பாரியாரும்.

## வாடிக்கையாளர்கள் பாவனையாளருக்கு

தோலகட்டி தயாரிப்பாளர்களின்

**ஒரு முக்கிய அறிவித்தல்**

தற்போது உள்ள கால சூழ்நிலையிலும் மூலப் பொருட்களின் விலை உயர்வு காரணமாகவும் எமது நெல்லிரசத்தின் விலையை - அதாவது மொத்தவிலையை உயர்த்தி உள்ளோம். வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள் இவ்விலை உயர்வை தற்கால சூழ்நிலையில் பெரிதாக எண்ணமாட்டார்கள் எனவும் எமக்கு நல்லாதரவு தருவார்கள் எனவும் தாழ்மையுடன் எண்ணுகின்ருேம். நன்றி

போலிகள் கவனம்!

நெல்லிரசம் மொத்தவிலை ரூபா 22/-
ஆகக் கூடிய சில்லறை விலை ரூபா 24/50

இது ஓர் உள்ளூர் உற்பத்தி என்பதை மறவாதீர்கள்.

ஏகப்பிரதிநிதிகள்
ஜோ. எகட்டன்,
செனித் மார்கட்டிங்,
யாழ்நகர்.

செபமாலை தாசர் சபை,
தோலகட்டி,
வயாவிளான்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற
வரணி மிசன் விற்பனை நிலையம்
B/1393 145, நவீனசந்தை யாழ்ப்பாணம்

## தொழிற்பயிற்சி

- ரெலிவிசன், வீடியோடெக் றிப்பியறிங் (இரண்டு மாத முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்)
- எலக்ரிக்கல் வயறிங், வீட்டு மின்சார வேலை, மின்சாரபொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
- றீவைண்டிங், சகல மின்சார பொருட்கள் றீவைண்டிங் செய்யும் முறை பயிற்சியளிக்கப்படும்.

குறிப்பு:- வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் வேலை வாய்ப்பு பெறக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படும்.

மீண்டும் ஆரம்பம் : 11-07-86

**Jaffna Technical Institute**

ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை)
யாழ்ப்பாணம். R/24013

உங்கள் குடும்பத்துக்கு நீங்கள் வழங்கும் பரிசு

# அமிர்த கங்கை

பெரிய அளவு - புதிய அமைப்பு

மூவர்ண அட்டைப்படம்

★ ரமணி - பாலர் பகுதி அதிக பக்கங்களுடன்
★ ஆனி மாத சோதிட இராசிபலன்
★ சிறு கதைகள், கட்டுரைகள், தொடர்கதைகள்.

விலை ரூபா 5/- மட்டுமே

அமிர்த கங்கை, 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

உதய சிந்தனை

உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலை நிற்க வல்லது வேறொன்று இல்லை.
— திருக்குறள்.

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

இதய ஒலி

8-7-86 செவ்வாய்க்கிழமை (அக்ஷய) ஆனி 24

# பழம்பெரும் தலைவரை பாரதம் இழந்துவிட்டது

பாரதத்தின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரும், இந்திய சுதந்திரப் போராட்ட முக்கியஸ்தர்களில் ஒருவரும், சிறந்த ஜனநாயகவாதியுமான ஜெகஜீவன்ராம் அவர்கள் நேற்று முன்தினம் இயற்கை மரணமெய்தினர் என்பதை கவலையுடன் இங்கு குறிப்பிடுகின்றோம்.

பாரதத்தின் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலனில் மிகுந்த அக்கறையும், அவர்களின் முன்னேற்றத்தில் அதீத ஈடுபாடும் கொண்டுழைத்த மகோன்னத தலைவர் ஒருவரை பாரத மாதா இழந்து விட்டாள்.

இந்தியாவின் தேசியக்கட்சியாக மிளிரும் இந்திரா காங்கிரஸ் மூன்றுவது தலைமுறையை இப்போது தலைவராகக் கொண்டுள்ளது. ஆனால் ஸ்தாபர்களில் ஒருவராக அண்ணல் காந்திஜி, ஜவஹர்லால் நேரு ஆகியோருடன் சேர்ந்துழைத்தவர் ஜெகஜீவன்ராம் அவர்கள்.

எழுபத்தெட்டு வயதான பெரியார் ஜெகஜீவன்ராம் ஒரு பழுத்த அரசியல்வாதி.

ஏறத்தாழ நாற்பது வருட காலத்தை முழுநேர அரசியல் வாதியாகச் செலவிட்டவர். இதில் சுமார் முப்பதாண்டுகளாக அமைச்சரவைகளில் இடம்பெற்று நாட்டுக்கு அயராது பணியாற்றியுள்ளார்.

பல்வேறு பிரதமர்களின் கீழ், பல்வேறு அமைச்சர் பதவிகளையும் வகித்து, பல்துறை அரசியல் அனுபவங்களையும் பெற்ற பழுத்த அரசியல்வாதி என்று ஜெகஜீவன்ராமைக் குறிப்பிட்டால் அது எந்தவகையிலிலும் தவருகாது.

இறுதியாக மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்த போது, இந்திய அரசியல் வரலாற்றில் முதல்தடவையாகத் துணைப்பிரதமர் என்ற பதவியை இவர் வகித்தார். அதறகுப்பின்னர் இந்தப் பதவி ஒழிக்கப்பட்டுவிட்டது.

இந்திரா காங்கிரஸிலிருந்து வெளியேறிய ஜெகஜீவன்ராம், பின்னர் மொரார்ஜி கூட்டமைப்பிலிருந்தும் வெளியேறி புதிதாக காங்கிரஸ் (ஜெ) கட்சியை ஆரம்பித்தாராயினும், இக்கட்சி வெற்றி வாய்ப்புகளைப் பெறவில்லை.

தேர்தல் தோல்வியைக்கண்டு அஞ்சி, ஜெகஜீவன்ராம் அரசியல் அஞ்ஞாதவாசம் செய்யவில்லை.

புதிய பிரதமராக பதவியேற்ற ராஜீவ் காந்தி, முதலாவது பாராளுமன்ற ஆரம்பக்கூட்டத்தின் தற்காலிக சபாநாயகராக ஜெகஜீவன்ராமையே நியமித்து, அவரைக் கௌரவித்தார்.

அந்தக் கௌரவத்தை ஏற்றுக்கொண்டு இந்திய அரசியலில் புதிய சகாப்தமொன்றை உருவாக்கிக் கொடுத்தார் ஜெகஜீவன்ராம்.

இதேபோன்று, பஞ்சாப் பிரச்சினை சம்பந்தமான ஆலோசனைக் குழுவொன்றை அமைத்தபோதும் அதன் தலைவராக ஜெகஜீவன்ராமையே பிரதமர் ராஜீவ் காந்தி நியமிக்க விரும்பினர்.

அதனை முழுமனத்துடன் ஏற்றுக்கொண்ட ராம், அப்பதவியை தனது அரசியல் வளர்ச்சிக்குப் பயன்படுத்தாது, நாட்டின் ஒற்றுமைக்கும், பாதிக்கப்பட்ட மக்களின் உயர்ச்சிக்கும் பயன்படுத்தி, ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அள்ளி வழங்கினர்.

ஒரு அரசியல் கட்சியின் தலைவராக மட்டும் தம்மைக் கட்டுப்படுத்தி, குறுகிய அரசியல் லாபத்தைத் தேட ஜெகஜீவன்ராம் ஒரு போதும் முயன்றதில்லை.

அம்பேத்கார் அவர்களுக்குப் பிறகு தாழ்த்தப்பட்ட மக்களின் ஏகோபித்த தலைவனுகத் திகழ்ந்த அன்னர், இந்திய மக்களின் மூத்த அரசியல் வாதியாகவும் அங்கீகாரம் பெற்று உயர்ந்திருந்தார்.

மகாத்மா காந்தி அவர்களுக்குப் பின்னர் 'பாபுஜி' என்று அன்புடன் மக்களால் அழைக்கப்பட்ட தலைவர் ஜெகஜீவன்ராம்.

எழுபத்தெட்டு வயதென்பது அரசியல் வாதிகளைப பொறுத்தளவில், மிகக் குறைந்த வயதுதான்.

பல நாட்டுத்தலைவர்கள் இந்த வயதில்தான் பதவியேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

திடீரென நோய்வாய்ப்பட்ட ஜெகஜீவன்ராம் காலமானது வேதனைக்குரியது.

பழம்பெரும் தலைவர் ஒருவரை பாரதம் இழந்து விட்டது.

★ தமிழகத்தில் 'தொண்டா' அறிவிப்பு; தமிழர்க்கு மேலும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற

# கோரிக்கையை பரிசீலிக்க தயாராக இருக்கிறுர் ஜே. ஆர்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான தனது யோசனைகளில் சில திருத்தங்களைச் செய்ய இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர்- ஜெயவர்தன தயாராக இருக்கிறுர். இத்தகவலை தற்போது தமிழக விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை கிராமத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் திரு, எஸ், தொண்டமான் வெளியிட்டுள்ளார்.

தமிழர்களுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைச் சாதகமான விதத்தில் தான் பரிசீலிப்பதாக ஜனதிபதி தன்னிடம் உறுதியளித்திருப்பதாக திரு. தொண்டமான் கூறினர்.

பல்வேறு அரசியல் கட்சிகளையும் சந்தித்து நடத்தப்படும் ஆலோசனைகளின் பின்னர் எதிர்வரும் பதினைந்தாம் திகதி நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் குறிப்பிட்டயோசனைகள் மீண்டும் ஆராயப்படும் என்றும் அதற்குப் பிறகு மேலும் அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கை குறித்து கரிசனையுடன் பரிசீலனை செய்யப்படும் என்றும் திரு. ஜெயவர்த்தன தன்னிடம் கூறியுள்ளதாகவும் திரு. தொண்டமான் சொன்னர்.

தமிழரின் அபிலாசைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதாகப் புதிய யோசனைகள் இல்லை என்று கருத்து வெளியிட்ட அவர், எனினும் நிலைமை முன்னிலும் பார்க்க முன்னேற்றம் கண்டுள்ளது. பாரத மத்தியஸ்த முயற்சியே இதற்குக் காரணம் என்றும் கூறினுர்.

பெனஸிர் பூட்டோ திடசங்கற்பம்

# நெருக்குதல்கள் மூலமாக இலட்சியத்தை அடைவேன்

(லாகூர்)

பாகிஸ்தானில் ஜெனரல் ஷியாவுல்-ஹக்கின் ஆட்சிக்கு எதிராக ஆட்சேப தினம் நடத்துவதில் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவியான செல்வி பெனஸிர் பூட்டோ தீவிர ஆர்வம் காட்டி வருகின்றுர்

கடந்த சனிக்கிழமை இவ்விதம் ஆட்சேப தினம் நடத்தப்பட்டது.

பாகிஸ்தானின் சுதந்திர தினமான ஆகஸ்ட் மாதம் பதினன்காம் திகதி யன்றும் இவ்வாறு ஆட்சேபதினம் நடத்தப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

இடைத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறார்.

இந்த வகையில் தான் தொடர்ந்து தற்போதைய அரசுக்கு நெருக்குதல் கொடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டணி குழு

## புதனன்று சென்னை வரும்?

(சென்னை)

தற்போது புதுடில்லி சென்றுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் புதன்கிழமை சென்னை திரும்பக் கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் வந்ததும் பொலிட்பீரோ கூடி பதினைந்தாம் திகதி கொழும்பில் நடைபெறும் மாநாட்டில் பங்கு பற்றுவதா என்பது குறித்து முடிவு செய்யும்.

## பொருட்காட்சி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் கல்விப் பொருட்காட்சியொன்று இம் மாதம் 14 ம், 15 ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளைப் பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் தலைமையிலான ஆசிரியர் குழு மேற்கொண்டுவருகிறது.

## 'பாஸ்' பஸ்கள் செல்ல அனுமதி

யாழ்நகரிலிருந்து கொழும்பிற்கு நேற்று சில தனியார் பஸ்கள் சேவையினை மேற்கொண்டன. இச் சேவையினை மேற்கொள்வதற்காக குறித்த பஸ்கள் பலாலி இராணுவ முகாமிலிருந்து அனுமதியினைப் பெற்றிருந்தன. இவ்வாறுன அனுமதியினைப் பெருது சென்ற பல பஸ்கள் நேற்று முன்தினம் ஆனையிறவில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டது தெரிந்ததே.

## பயிற்சி

(புலோலி)

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் உதவியுடன் வியாபாரிமூலை ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம் பெண்களுக்கான 'பன்ன வேலைப் பயிற்சி' நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சுமார் 20 இளம் பெண்கள் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இப்பயிற்சி நிலையத்திற்கான ஆசிரியை பனம் பொருள் அபிவிருத்திச் சபையால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

**J.C.C. தனது புதிய சேவைகளுக்கு உங்களை அன்புடன் அழைக்கின்றது**

உரும்பராய் சந்தைக்கு முன்னல் உள்ள மாடிக் கட்டிடத்தில் வருகிற புதன் (9.7.86) முதல் பின்வரும் சேவைகளை வழங்குகின்றது. காலை 7.45 மணிக்கு விற்பனையை திரு. த. மகாலிங்கம் (மகான்) அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்.

(I) உங்களிற்கு தேவையான துவிச்சக்கர வண்டிகள், சைக்கிள் உபகரணங்கள் மற்றும் பிளக் வகைகள்.

(II) பரிசளிப்பதற்கும் வீட்டுப் பாவனைக்கும் ஏற்ற எவர்சில்வர் பாத்திரவகைகள், பிளாஸ்ரிக் சாமான்கள், அலுமினியப் பாத்திரங்கள்.

(III) கல்லூரி மாணவிகளுக்கும், நங்கையருக்கும் தேவையான, லேஸ், றிபன், தொப்பி, சட்டைப் பொத்தான்கள், கிளிப், சாந்துப்பொட்டு, குங்குமம் இன்னும் பல பொருட்கள்.

(IV) கல்லூரிக்கு தேவையான அப்பியாசக் கொப்பிகள், உபகரணங்கள், பொலிதீன், பிறிஸ்டல் போட் மற்றும் பல அவசியமான பொருட்கள்.

(V) சிறுவர்களுக்கான விளையாட்டுச் சாமான்கள்.

(VI) இன்ப துன்ப நிகழ்ச்சிகளுக்கு தேவையான தகரக் கொட்டகைகள், இரும்புக் கதிரைகள் (வாடகைக்கு)

உங்கள் இனிமையான ஆதரவை பணிவுடன் நாடும்

J. C. C. நிறுவனம்

உரும்பராய் சந்தி,
உரும்பராய். R/24017

ஈழமுரசு

THE EELAMURASU

## கஞ்சாப் பிரியர்கள் மூவருக்கு 'கொளுத்தும் வெய்யில்' தண்டனை

(கரவெட்டி)

கஞ்சா விற்பனையிலும், பாவனையிலும் ஈடுபட்ட மூன்று இளைஞர்களுக்கு 'கொளுத்தும் வெய்யில்' தண்டனை புலிகளால் வழங்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் நெல்லியடியில் இடம்பெற்றது. இந்த மூவரும் முறையே கஞ்சாவை விற்றும், வாங்கியும், பாவித்தும் இருக்கும்போது விடுதலைப்புலிகளால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர். இதனையடுத்து நெல்லியடிச் சந்தியில் கஞ்சா தீமூட்டி எரிக்கப்பட்டது. பின்னர் இம் மூவரும் நண்பகல் வரை கொளுத்தும் வெய்யிலில் நிற்க விடப்பட்டனர். அவர்களும் வீதியில் தார் கொதிக்கும் சூட்டை தாங்கமுடியாது துள்ளியபடி நின்றதை பலர் பார்வையிட்டனர்.

### இராணுவத் தொல்லை அதிகரிப்பால்

# சாம்பல்தீவு தமிழ்க் குடும்பங்கள் வெளியேறி

## முல்லைத்தீவில் குடியேற்றம்

சாம்பல் தீவுப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களினால் இப்பகுதியில் எஞ்சியிருக்கும் சில தமிழ்க் குடும்பங்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது. இரவுவேளையில் தமிழரின் இல்லங்களுக்குள் புகும் இராணுவத்தினர் பல விதத்திலும் தொல்லை கொடுத்து வருகின்றனராம்.

இதனால் பல தமிழ்க் குடும்பங்கள் கடல் மார்க்கமாக முல்லைத்தீவிற்கு வந்து அங்குள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். இவர்களுள் பத்து குடும்பங்கள் சில தினங்களுக்கு முன்னர் பத்தமேனியிலுள்ள அகதி முகாமிற்கு வந்துசேர்ந்தனர்.

சாம்பல் தீவிலிருந்து வெளியேறும் தமிழ் அகதிகள் திருமலை நகரை நோக்கி செல்ல முயன்றால் அவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படுகின்றனராம். அதை விடுத்து வடபகுதியை நோக்கிவர அகதிகள் முயன்றால் கடற்படையினர் அதற்கு அனுமதித்து திரும்பி மீண்டும் சாம்பல் தீவிற்கு வரவேண்டாமென கூறி அனுப்புகின்றனராம்.

### மா, சீனி, தாராளமாக உண்டு; ஆனால்

## சில வர்த்தகர்களினால் செயற்கை தட்டுப்பாடு

வடபகுதிக்கு இரு உணவுக் கப்பல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ருகுணு என்ற கல்பல் ஆயிரம் தொன் மாவுடன் நேற்று காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்தது. மேக்ஸ் கொழும்பு என்ற கப்பல் இரண்டாயிரம் தொன் சீனியுடனும், ஆயிரம் தொன் அரிசியுடனும் நாளை புதன்கிழமை இங்கு வருகிறது.

வடபகுதியில் மா, அரிசி, சீனி போன்ற உணவுப் பொருட்களுக்கு எதுவித தட்டுப்பாடும் இல்லை எனவும் சில வர்த்தகர்கள் பல காரணங்களை கூறி இவற்றை அதிக விலைக்கு விற்கிறார்கள் என உணவுத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

### யாழ். பல்கலைக்கழகத்தில்

## பல்கலைக்கழக தெரிவு விபரம் இப்போது அறியமுடியும்

1986/87ம் கல்வி ஆண்டில் ஆரம்பமாகும் பல்கலைக்கழக கற்கை நெறிகள் அனைத்திற்கும் தெரிவான மாணவர்கள் பற்றிய விபரங்கள் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ளன. இது பற்றி தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்படவுள்ளது.

பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் பற்றிய விபரங்களை யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் அலுவலகத்தில் தினசரி காலை 8 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்குமிடையே நேரில் சென்று தற்பொழுது அறிந்து கொள்ளலாம்.

பல்கலைக்கழக தெரிவு தொடர்பான மேன்முறையீடுகள் அனைத்தும் இம் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படல் வேண்டும்.

## பல்கலைக்கழக கருத்தரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான கல்வி வட்டத்தின் ஆதரவில் பேராசியர் கா. சிவத்தம்பி "யாழ். குடாநாட்டின் வர்க்க உருவாக்கமும் சாதியமைப்பும்" என்னும் பொருள்பற்றி இம் மாதம் 11-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் உரையாற்றுவார்.

## இன்று

(சங்கானை)

பண்டத்தரிப்பு திருச்சபை தேவாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை வண. பிதா சாம்தம்பு தலைமையில் மரம் நாட்டு விழா நடைபெறும்.

தொழிலதிபர் திரு. க. கனகராஜா ஜே. பி., யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரன், யாழ். விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. ச. கிருஷ்ணபிள்ளை, யாழ். உதவிக் காணி ஆணையாளர் திருமதி இ. இராமச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

மேற்படி விழா ஏற்பாடுகளை பண்டத்தரிப்பு விவசாய விஸ்தரிப்பு அலுவலர் திரு வை. பாலகிருஷ்ணன் கவனித்து வருகின்றார்.

## பூநகரியில் ஹெலிகொப்டர் சரமாரியாகச் சுட்டது

(பூநகரி)

மன்னார் பகுதியிலுள்ள கள்ளியடி என்ற இடத்தில் நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு வானில் வட்டமிட்ட ஹெலிகப்டர் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இச்சம்பவத்தையடுத்து இப்பகுதி மக்கள் பாதுகாப்புத் தேடி அங்கும் இங்கும் ஓடினார்கள். அவ்விடத்துக்கு வந்த போராளிகள் இந்த ஹெலிகப்டர் மீது எதிர்த் தாக்குதலை நடாத்தினர் இதனால் அது புகைகக்கியபடி மேலே சென்று மறைந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து பகலில் இரு பொம்பர்கள் இப்பகுதியை வட்டமிட்டுச் சென்றது.

## கற்கோவள கடற்கரையில் நிர்வாண நிலையில் சடலம்

(புலோலி)

கற்கோவளக் கடற்கரையில் காயங்களுடன் நிர்வாண நிலையில வயோதிபர் ஒருவரின் சடலம் நேறறுக் காலை காணப்பட்டது. இச் சடலத்தை விடுதலை இயக்கப் போராளிகள் மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சடலத்தில் முதுகு, பிடரிப் பகுதிகளில் காயங்கள் காணப்படுகின்றன. தலைமயிர் முழுமையாக நரையாகக் காணப்படுவதுடன் மரணமானவருக்கு சுமார் 65 வயதிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வயோதிபர் கொலை செய்யப்பட்டு கடற்கரையில் கொண்டுவந்து போடப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### 'ஜே. ஆரின் உத்தேச ரஷ்ய விஜயம்

## போராளிகளை வலுவிழக்க முனையும் நயவஞ்சக திட்டம்'

ஜனாதிபதி ஜெயவர்த்தன சோவியத் யூனியனுக்கு அண்மையில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள விஜயம் இரு முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளதாக புதிய ஜனநாயக மாணவர் சங்கத்தினால் 'ஜே. ஆரின் சோவியத் விஜயத்தின் பின்னணி என்ன?' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகள் தரவிருக்கின்ற கடன் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கப் பயன்படாது. இப்போ நாம் அரசியல் தீர்வொன்றிற்காகவே முழு முயற்சியுடன் ஈடுபட்டுள்ளோம் என நம்பவைப்பது.

ரஷ்ய முதலீடுகளுக்கு வாய்ப்பு அளித்திருப்பதனால் ரஷ்யாவுடன் நெருக்கமான உறவுகளைப்பேணி இந்தியரஷ்ய நட்புறவுடன் போராளிகளுக்கு வழங்கப்படும் உதவிகளை தடைசெய்வித்து அரசியல் தீர்வு அல்லது இராணுவத் தீர்வை அமுல் செய்தல்.

இவ்விரண்டு நோக்கங்களே அவரது ரஷ்ய விஜய நோக்கமென தெரிவித்துள்ள மாணவர் சங்கம், இரண்டாவது நோக்கம் வெற்றியளிக்குமானால், முன்புஎப்படி எத்தியோப்பியாவில் ரஷ்யாவினால் விடுதலைப் போராட்டம காட்டிக் கொடுக்கப்பட்டு போராளிகள் முதுகில் குத்து விழுந்ததோ அதுவே எமக்கும் நிகழும் எனவும் தெரிவிததுள்ளது.

## குருநகர் மீனவர் அஞ்சலி நிகழ்ச்சி

(குருநகர்)

படுகொலையுண்ட குருநகர் மீனவர்களுக்கான அஞ்சலி நிகழ்ச்சிகள் புனித பேதுருவானவர் இளைஞர் மன்ற முன்றலிலும், சம்பவ இடத்திலும் இன்று காலை மண்டைதீவு பங்கு மக்களால் நடத்தப்படவுள்ளது.

திருப்பலி ஒப்புக்கொடுத்தல் ஆலயத்தில் இருந்து சம்பவ இடததிற்கு ஊர்வலம், பங்குத் தந்தை அருட்திரு. கமிலஸ் நிமலன் அடிகளால் நினைவுத்தூபி திறந்து வைத்தல், அஞ்சலிக் கூட்டம் என்பன நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## ஏ. எஸ். பி. இடமாற்றம்

யாழ். உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. எஸ். நிக்கலஸ் கொழும்பு தலைமையலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தமிழரான இவரது இடத்துக்கு பதிலாக ஏ. எஸ். பி. திரு. வணிகரட்ணம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரும் ஒரு தமிழராவர்.

## தீவுப்பகுதி நெருக்கடி நிலை; ஆராயக் கருத்தரங்கு

(வேலணை)

தீவுப்பகுதியின் இன்றைய நெருக்கடி நிலைபற்றிய கருததரங்கொன்று இம் மாதம் 12ந் திகதி சனிககிழமை காலை ஒன்பது மணிமுதல் மாலை மூன்று முப்பதுமணிவரை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிகுமாரசாமி மண்டபததில் யாழ். பல்கலைக்கழக புவியயற்துறைத் தலைவர் திரு. எஸ். பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

போக்குவரத்துப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகாணும் வழிவகைகளை ஆராய்தல், உணவு விநியோகம், வைததிய சேவை, தபால் தந்திச்சேவை போன்ற அத்தியாவசியதேவைகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் போன்ற விடயங்கள் பற்றி ஆராய்ந்து செயற்திட்டக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

மக்கள அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள், கல்விமான்கள், அபிமானிகள் ஆகியோர் கருத்துரை நிகழ்த்த உள்ளனர். இக்கருத்தரங்கின் அமைப்பாளர்களாக யாழ். சமநல சேவை சிரேஷ்ட உதவி ஆணையார் திரு. கே. பரமலிங்கம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கா. குகபாலன், புங்குடுதீவு வெகுஜன விழிப்பு ஒன்றியத்தை சேர்ந்த திரு. சு. வில்வரத்தினம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. இரா. சிவச்சந்திரன் ஆகியோர் கடமையாற்றுவார்கள்.

### மாங்கேணி ராணுவ...

அகப்பட்டுக் கொண்டனர்.

இத் தாக்குதலுக்கு எம்மவர்கள் பல நவீனரக ஆயுதங்களை உபயோகித்தனர். பணிச்சங்கேணி, காயங்கேணி பாலங்களும் எம்மவர்களால் தகர்க்கபபட்டன. இதனால் வேறு முகாம்களிலிருந்து இம்முகாமிலுள்ளவர்களுக்கு தரை வழியாக உதவிகள் கிடைப்பதில் பெருந்தடை ஏற்பட்டது.

மூன்று பொம்பர்களினதும், இரண்டு ஹெலிக்கப்டர்களினதும் குண்டு வீச்சுக்களின் மத்தியிலும் எம்மவர் எவ்வித இழபபுகளுமின்றி முகாம் திரும்பினர்." என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

### பலாலியில்...

பொலிஸாரே இங்கு கடமையாற்றுவார்கள்.

தற்போது நடைமுறைப்படுத்தியுள்ள போக்குவரத்து பாஸ் மற்றும் எரிபொருள் அனுமதிப் பத்திரம் என்பவற்றை பொது மக்கள் பலாலி முகாமில் பெறவதற்கு வசதியாகவே இந்தப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### கொழும்பு பஸ்...

பமிட் பாஸ்கள் உள்ள வாகனங்களே ஆனையிறவை தாண்ட அனுமதிக்கப்பட்டனவாம்.

### ஜெயவர்த்தன...

வார்த்தைகளை நடத்தினர். அநேகமாக இவர்கள் நாளை சென்னை திரும்பலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### தொண்டமான்...

னைகளை தமது கட்சி இலங்கை அரசுக்கு அனுப்பியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

### மினி முகா...

இதனால் மரியதாஸுக்கு அடிவயிற்றில் காயமேற்பட்டது. அவர் மற்றைய இரு கடற்றொழிலாளர்களின் உதவியுடன் கடலில் நீந்தி கரையை வந்தடைந்தார். படகு கடலில் கைவிடப்பட்ட நிலையிலுள்ளது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவருககு நேற்றுபிற்பகல் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 08-07-86 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437